**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 05/2024**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.10.2025 | | |
| பெயர்: | நல்லரசன் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | கேசவன் |
| கிராமம்: | அளக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | வயது : | 43/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 27.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.07)**

1. நான் தற்போது அளக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மளிகை வியாபாரம் செய்து வருகிறேன். தாவா சொத்து செந்தாமரைக்கண்ணனிடமிருந்து ரூ. 65,000/– கொடுத்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். செந்தாமரைக்கண்ணனுக்கு எவ்வாறு தாவா சொத்து கிடைத்தது என்றால் செந்தாமரைக்கண்ணனின் சித்தி பிச்சையம்மாள் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார், மேற்படி பிச்சையம்மாளுக்கு செந்தாமரைக்கண்ணன் தான் வாரிசு என்பதன் அடிப்படையில் உயில் மூலமாக கிடைக்கப்பெற்றது.

2. பிச்சையம்மாளுக்கு எவ்வாறு தாவா சொத்து கிடைத்தது என்றால் அவரது கணவர் அமிர்தலிங்கம் பிச்சையம்மாளுக்கு செட்டில்மெண்ட் செய்த வைத்தார், அதன் மூலம் கிடைக்கப்பெற்றது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அந்த ஆவணம் என்னிடம் இல்லை. அமிர்தலிங்கத்திற்கு எவ்வாறு தாவா சொத்து கிடைத்தது

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து அளக்குடியில் உள்ளது என்றாலும் அதற்கு சார் பதிவாளர் அலுவலகம் கொள்ளிடத்தில் உள்ளது என்றாலும் சரிதான். ஆனால் பிச்சையம்மாள் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் சிதம்பரத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர அளக்குடியில் எனது பெயருக்கு வேறு சொத்துக்கள் உண்டா என்றால் நான் மளிகை கடை நடத்தும் இடம் எனக்கு சொந்தமானதாகும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.16)**